1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை உணவுக் காளான் பற்றித்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். காளான்களிலேயே பென்சிலின், ஆஸ்பர்ஜிலஸ் மற்றும் பல மருத்துவ குணங்கள் உள்ள காளான்கள் இருக்கின்றன. அவற்றை, ஊட்டி, கொடைக்கானல் போன்ற குளிர்ந்த பிரதேசங்களிலே வளர்க்கலாம். அவ்வாறு அவற்றை வளர்த்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஊட்டியிலே மிகப்பெரிய தொழிற்சாலை ஒன்று காளான்களை வளர்த்து மேலை நாடுகளுககு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது. அதுபோல் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய்க்கு மேலே மூலதனம்போட்டு தனியார் ஒருவர் காளான் உற்பத்தி செய்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார். இன்றைக்கு ஒரு புதிய நிறுவனமாக தனியாரும், தமிழ்நாடு வேளாண் தொழில் கழகமும் இணைந்து கூட்டுத் துறையிலே மிக விரைவிலே ஒரு காளான் வளர்ப்பு தொழிற்சாலையை உருவாக்க இருக்கிறோம் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியை பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். *329*, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

முற்பகல் 10.30

329—

ஆரணியில் பால் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை.

36229*—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், ஆரணி நகரில் பாலிதீன் பைகளில் ஆவின் பால் விற்பனையை அதிகரிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

[1995 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாலிதீன் பைகளில் பால் விற்பனையை அதிகரிக்க வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் சுவரொட்டிகள் மூலம் விளம்பரம் செய்துள்ளது, மேலும் ஒலிபெருக்கிகள் மூலம் ஆரணி நகர் முழுவதும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. விற்பனையை அதிகரிக்க புதிய முகவர்களை நியமிக்க ஒன்றியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஒன்றியம் குழு அமைத்து, அதன் மூலம் விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனையை அதிகரிப்பதற்கான சில முறைகளை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அமைந்தவுடன் ஆரணி தொகுதியிலே முதல்முதலாக அமுலான திட்டம் இந்த பாலிதீன் பாக்கெட் பால் அறிமுகப்படுத்தப்பட்டதுதான். அன்றைக்குப் பால் வளத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ஜெயகுமார் அவர்களால் துவக்கப்பட்டு, விற்பனையையும் அவர்களே துவக்கி வைத்தார்கள். ஆரணியினுடைய பால் தேவையினுடைய அளவு ஒரு நாளைக்கு ஆறாயிரம் லிட்டர். பாலிதீன் பாக்கெட் பாலினுடைய விற்பனைகூட படிப்படியாக உயர்ந்து 2,300 லிட்டர் என்கிற அளவை எட்டியபோது, சைக்கிள் வெண்டார்கள் என்று சொல்லக்கூடிய கூட்டுறவு பால் விற்பனையாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், அவர்கள் ஏற்கெனவே தண்ணீரைக் கலந்து பாலை விற்பனை செய்த காரணத்தால்தான் இந்த முறையை நாங்கள் அறிமுகப்படுத்தினோம். அவர்கள் பாலிதீன் பாக்கெட் பாலுக்கு எதிராக வதந்தியைப் பரப்பி, அது வெண்ணெய் எடுக்கப்பட்ட பால், பழைய பால், சத்தில்லாத பால் என்றெல்லாம் மக்களைக் குழப்பி, அதுமட்டுமல்லாமல், ஒரு காலத்தில் பாலீதின் பாக்கெட் பாலுக்கு தட்டுப்பாடு வருமேயானால் நாங்கள் சைக்கிளில் கொண்டு வந்து பால் தரமாட்டோம் என்றெல்லாம் வாங்குபவர்களை அச்சுறுத்தி, அதன் காரணமாக 2,300 லிட்டரிலேயிருந்து தற்போது விற்பனை 600 லிட்டராகக் குறைந்து இருக்கிறது. ஆகவே, இதன்மீது அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மிக்க நன்றி. ஆனால் ஒன்றை சற்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதுள்ள முகவர்களுக்கே, அவர்கள் கேட்கின்ற அளவுக்குப் பால் கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் விற்பனையாளர் சங்கத்தினுடைய மேலாண்மை இயக்குநரை தொடர்பு கொள்கிறபோது, எவ்வளவு பால் வேண்டுமானாலும் பாலிதீன் பைகளில் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் முகவர்களைக் கேட்டால், நாங்கள் கேட்கிற அளவுக்கு எங்களுக்குப் பால் கிடைப்பதில்லை என்றே முகவர்கள் கூறுகிறார்கள். இதிலே ஏதோ தவறு நடக்கிறது. இதைக் கண்டுபிடித்து, தவறு செய்பவர்கள்மீது தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *330*, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

330—

கழிவுநீரைச் சுத்தப்படுத்தும் திட்டம்.

**26940*—திரு வெ. பழனிசாமி:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் டையிங், பிளிச்சிங் பேக்டரி கழிவு நீரை மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் சுத்தப்படுத்தப்படும் திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

(ஆ) இத்திட்டத்திற்கான மத்திய, மாநில அரசின் ஒதுக்கீடு தொகை எவ்வளவு?